மக்களுக்கான உணவு, ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்ய மத்திய அரசுடன் ஒன்றிணைந்து உறுதுணை புரிவோம்

தமிழக உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி பேச்சு

புதுடெல்லி, ஜூலை.6

மக்களுக்கான உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்ய மத்திய அரசுடன் ஒன்றிணைந்து உறுதுணை புரிவோம் என்று தமிழக உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி பேசினார்.

இந்தியாவில் உணவு மற்றும் ஊட்டசத்து பாதுகாப்பு தொடர்பாக டெல்லியில் நேற்று மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் உணவு அமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது. மத்திய வர்த்தகம், தொழில்துறை, நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் பொது வினியோகங்கள் துறை அமைச்சர் பியூஸ் கோயல் தலைமையில் நடந்த இந்த மாநாட்டில் தமிழக உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆற்றிய உரை வருமாறு:

தமிழ்நாட்டில் உள்ள பொது வினியோக திட்ட அங்காடிகளில் நடைபெறும் பரிவர்த்தனைகளில் 98 சதவீத கைவிரல் ரேகை பதிவு மூலம் நடைபெறுகிறது. இதனால் உரிய ரேஷன் அட்டைதாரர்கள் பயன்

பெறுவது உறுதி செய்யப்படுகிறது. பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளார்.

நிதி ஆயோக் சமீபத்தில் வெளியிட்ட பல்முனை வறுமைக்குறியீடு அறிக்கையில் தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் 4.98 சதவீதம் மட்டுமே ஏழ்மையில் உள்ளனர் என்றும், ஆனால் இந்தியா முழுமைக்கும் 25.01 சதவீதம் பேர் ஏழைகளாக உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது.

பொது வினியோக திட்டம் மற்றும் சிறப்பு பொது வினியோக திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருப்பது முக்கியமான ஒன்றாகும். பார்வையுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் வழிகாட்டுதலில் மத்திய அரசுடனும், இதர மாநில அரசுகளுடனும் ஒன்றிணைந்து நம் நாட்டில் அனைவருக்கும் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்ய உறுதுணை புரிவோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழக கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ராதாகிருஷ்ணன் கலந்துகொண்டார்.

இச்சாதனைக்கு காரணங்களில் தொலைநோக்கு முதலமைச்சர்

வணிக வளாகங்கள், திரையரங்குகள், மார்க்கெட் உட்பட

சென்னையில் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் முகக்கவசம் அணியாவிட்டால் ரூ.500 அபராதம்

சென்னை, ஜூலை.6

சென்னையில் வணிக வளாகங்கள், திரையரங்குகள், மார்க்கெட் போன்ற மக்கள் அதிகம் கூடும் இடங்களில் முககவசம் அணியாவிட்டால் இன்று முதல் ரூ.500 அபராதம் விதிக்கப்படும் என்று சென்னை மாநகராட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் நேற்று வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்த மாநகராட்சியின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாநகராட்சியின் சார்பில் தடுப்பூசி முகாம்கள் மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு பொதுமக்களுக்கு அதிகளவில் கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகராட்சியில் கடந்த 2 வாரங்களாக கொரோனா தொற்று பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சென்னையில் 4ந்தேதி நிலவரப்படி, 5,936 நபர்களுக்கு கொரோனா தொற்று பாதிப்பு ஏற்பட்டு சிகிச்சையில் உள்ளனர். இதில் 5,264 நபர்கள் வீட்டுத்தனிமையிலும், 57 நபர்கள் மாநகராட்சியின் கோவிட் பாதுகாப்பு மையங்களிலும், 263 நபர்கள் அரசு மற்றும் தனியார் ஆஸ்பத்திரிகளிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்கள் அனைவரும் எந்தவித உயிர்பாதிப்பும் இன்றி நலமுடன் உள்ளனர். மண்டல அலுவலகங்களில் உள்ள தொலைபேசி ஆலோ சனை மையத்திலிருந்து வீட்டுத்தனி மையில் உள்ள 5,264 நபர்களையும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்களின் உடல்நிலை குறித்து கேட்டறிந்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

எனவே, பொதுமக்கள் மார்க்கெட் பகுதிகள், அங்காடிகள், வணிக வளாகங்கள், திரையரங்குகள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள், ஆஸ்பத்திரிகள் போன்ற பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் செல்லும்போது தவறாமல் முககவசம் அணியவும், சமூக இடைவெளியை பின்பற்றவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வணிக நிறுவனங்கள் தங்களுடைய அங்காடிகளில் ஒரே நேரத்தில் பொதுமக்கள் அதிகம் கூடுவதை தவிர்த்து, சமூக இடைவெளியை பின்பற்றி பொதுமக்களை அனுமதிக்க வேண்டும். மேலும், வணிக வளாகங்கள், திரையரங்குகள், துணிக்கடைகள் போன்ற வணிக நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் முககவசம் அணிவதை அந்தந்த நிறுவனமே உறுதிசெய்ய வேண்டும். மேற்கண்ட இடங்களில் ஆய்வு மேற்கொள்ள மாநகராட்சியின் சார்பில் அந்தந்த வார்டுக்குட்பட்ட சுகாதார ஆய்வாளர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. எனவே பொது இடங்களில் முககவசம் அணியாத நபர்களுக்கு இன்று முதல் ரூ.500 அபராதம் விதிக்கப்படும்.

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பூசி 2ம் தவணை செலுத்திக்கொள்ளாத 8,68,930 நபர்களும், 60 வயதிற்கு மேற்பட்டவர்கள், இணை நோயுள்ளவர்கள் மற்றும் முன்களப்பணி யாளர்களில் முன்னெச்சரிக்கை தவணை தடுப்பூசி செலுத்திக்கொள்ளாத 3,76,917 நபர்களும் மாநகராட்சியின் சுகாதார மையங்களில் தடுப்பூசியினை செலுத்திக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நேற்று 2,662 பேருக்கு கொரோனா

சென்னை, ஜூலை.6

தமிழகத்தில் நேற்று 2 ஆயிரத்து 662 பேர் கொரோனா தொற்றால் புதிதாக பாதிக்கப்பட்டு உள்ளனர். சென்னையில் ஒரு மூதாட்டி உயிரிழந்தார்.

தமிழகத்தில் கொரோனா பாதிப்பு அதிவேகமாக உயர்ந்து வருகிறது. அந்தவகையில் நேற்றைய கொரோனா பாதிப்பு குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

நேற்று புதிதாக 26 ஆயிரத்து 188 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. இதில் ஆண்கள் 1,532 பேரும், பெண்கள் 1,130 பேரும் உள்பட 2 ஆயிரத்து 662 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் அதிகபட்சமாக சென்னையில் 1,060 பேர், செங்கல்பட்டில் 373 பேர், கோவையில் 137 பேர் உள்பட அனைத்து மாவட்டங்களிலும் தொற்று பாதிப்பு பதிவாகியுள்ளது.

12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் 112 பேரும், 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் 490 பேரும் நேற்று கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இதுவரை 38 ஆயிரத்து 27 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர். இதில் சென்னையை சேர்ந்த மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் நேற்றைய நிலவரப்படி 16 ஆயிரத்து 765 பேர் கொரோனா நோய்க்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். அதிகபட்சமாக சென்னையில் 6 ஆயிரத்து 946 பேரும், செங்கல்பட்டில் 2 ஆயிரத்து 546 பேரும் சிகிச்சையில் உள்ளனர். நேற்று 740 பேர் ஆஸ்பத்திரி சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். 1,512 பேர் கொரோனா நோயில் இருந்து குணமடைந்து நேற்று 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்டு உள்ளனர். இதுவரை தமிழகத்தில் 34 லட்சத்து 33 ஆயிரத்து 299 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சென்னை ஐகோர்ட் வளாகத்தில் உள்ள மெட்ராஸ் பார் அசோசியேஷனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் தலைவர்கள் எம். ராகவன், கே.அழகிரிசாமி, மத்திய பிரதேச உயர் நீதிமன்ற மறைந்த தலைமை நீதிபதி குமார் ராஜரத்தினம் ஆகியோரின் படங்களை, சுப்ரீம் கோர்ட் முன்னாள் தலைமை நீதிபதி பி.சதாசிவம், சுப்ரீம் கோர்ட் முன்னாள் நீதிபதி சி.நாகப்பன், ஐகோர்ட் தலைமை நீதிபதி முனீஸ்வர்நாத் பண்டாரி ஆகியோர் திறந்துவைத்தனர்.

நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கும் வழக்குகளை நீதிபதிகள் விரைவாக விசாரித்து முடிக்க வேண்டும்

சுப்ரீம் கோர்ட் முன்னாள் தலைமை நீதிபதி பி.சதாசிவம் அறிவுரை

சென்னை, ஜூலை.6

பல ஆண்டுகள் வழக்குகள் நிலுவை யில் இருப்பதால் வழக்காடிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அதனால், வழக்குகளை விரைந்து விசாரித்து முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று நீதிபதிகளுக்கு சுப்ரீம் கோர்ட் முன்னாள் தலைமை நீதிபதி பி.சதாசிவம் அறிவுரை வழங்கினார்.

சென்னை ஐகோர்ட் வளாகத்தில் உள்ள மெட்ராஸ் பார் அசோசியேஷன் என்ற பழமையான வக்கீல் சங்கத்தின் முன்னாள் தலைவர்கள், மறைந்த மூத்த வக்கீல்கள் எம்.ராகவன், (முன்னாள் அட்வகேட் ஜெனரல்) கே.அழகர்சாமி, மத்திய பிரதேச ஐகோர்ட் முன்னாள் தலைமை நீதிபதி குமார் ராஜரத்தினம் ஆகியோரது புகைபடங்கள் திறப்பு விழா ஐகோர்ட்டில் நேற்று நடந்தது.

இந்த நிகழ்ச்சியில் ஐகோர்ட் தலைமை நீதிபதி முனீஸ்வர்நாத் பண்டாரி, சுப்ரீம் கோர்ட் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி பி.சதாசிவம், சுப்ரீம் கோர்ட் ஓய்வுபெற்ற நீதிபதி சி.நாகப்பன் ஆகியோர் கலந்து கொண்டு புகை படங்களை திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில் ஐகோர்ட் மூத்த நீதிபதிகள் எம்.துரைசாமி, டி.ராஜா உள்ளிட்ட நீதிபதிகள், சுப்ரீம் கோர்ட் மற்றும் ஐகோர்ட் ஓய்வுபெற்ற நீதிபதிகள், வக்கீல்கள் என்று ஏராளமானோர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களை மெட்ராஸ் பார் அசோசியேஷன் தலைவர் வி.ஆர்.கமலநாதன் வரவேற்று பேசினார். செயலாளர் டி.சீனிவாசன் நன்றியுரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில், நீதித்துறை சீர்திருத்தங்களின் தற்போதைய நிலை சர்வதேச பார்வை என்ற தலைப்பில் சுப்ரீம் கோர்ட் ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி பி.சதாசிவம் உரையாற்றினார். அவர் பேசியதாவது:– நீதிமன்றங்களில் வழக்குகள் பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. இதை தடுக்கவே, நான் தலைமை நீதிபதியாக இருந்தபோது, மாதந்தோறும் லோக் அதாலத் என்ற மக்கள் நீதிமன்றத்தை நடத்த உத்தரவிட்டேன்.

இப்போதும், நாடு முழுவதும் இந்த லோக் அதாலத் சிறப்பாக நடந்து வரு கிறது. கொரோனா காலத்தில் தொய்வு ஏற்பட்டது. ஆனால், கீழ் நீதிமன்றங்களில் சிவில் வழக்குகள் பல ஆண்டுகளுக்கு பின்னர் முடிவுக்கு வருகிறது. அதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டும் அப்பீல் வழக்குகள், ஐகோர்ட்டில் 10 ஆண்டுகள், சுப்ரீம் கோர்ட்டில் 15 ஆண்டுகள் என்று நிலுவையில் இருக்கின்றன.

இதனால் வழக்கு தொடர்ந்தவர்களுக்கு பாதிப்பு மட்டுமல்ல, நீதிமன்றம் மீதான நம்பிக்கையை அவர்கள் இழக்க நேரிடும். எனவே, தொழிலாளர் வழக்கு, செக் வழக்கு, சொத்துகள் தொடர்பான வழக்கு, குடும்ப நல வழக்கு உள்ளிட்ட இந்த வழக்குகளை நீண்ட காலம் நிலுவையில் வைக்காமல், அந்த வழக்குகளை விரைந்து விசாரித்து முடிக்க வேண்டும். வழக்குகளை விரைந்து விசாரிக்க கீழ் கோர்ட் நீதிபதிகளுடன், ஐகோர்ட் நீதிபதிகள் அவ்வப்போது கலந்துரையாட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

IHCL ஓரியண்டல் ஹோட்டல்ஸ் லிமிடெட்

CIN. : L55101TN1970PLC005897
பதிவு அலுவலகம் : 'தாஜ் கோரமண்டல்'
37, மகாத்மா காந்தி சாலை, சென்னை 600034.
போன் எண். : 044 - 66002827 ஃபேக்ஸ் எண். : 044-28254447
இமெயில் : ohlshares.mad@tajhotels.com இணையதளம் : www.orientalhotels.co.in

52வது ஆண்டு பொதுக்கூட்டம், தொலைத்தூர மின்னணு வாக்கு மற்றும் புத்தக மூடல் அறிவிப்பு

ஓரியண்டல் ஹோட்டல்ஸ் லிமிடெட்டின் (கம்பெனி) உறுப்பினர்களின் **ஐம்பத்து இரண்டாவது (52வது) ஆண்டு பொதுக்கூட்டம்** ('AGM அல்லது கூட்டம்'), **வியாழக்கிழமை ஜூலை 28, 2022** அன்று **முற்பகல் 11.00 மணிக்கு (இந்திய நேரப்படி),** காணொளி காட்சி ("VC") மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஒலி, காட்சி சார்ந்த வழிமுறைகள் ("OAVM") மூலமாக மட்டுமே ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள வணிகத்தை பரிவர்த்தனை செய்ய கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம் (MCA) ('MCA சுற்றறிக்கைகள்' என்று கூட்டாக குறிப்பிடப்படுகிறது) வழங்கிய பொது சுற்றறிக்கைகள் எண்கள்.14/2020 தேதி ஏப்ரல் 08, 2020, 17/2020 தேதி ஏப்ரல் 13, 2020, 20/2020 தேதி மே 05, 2020 மற்றும் 2/2021 தேதி ஜனவரி 13, 2021, 21/2021 தேதி டிசம்பர் 14, 2021 மற்றும் 2/2022 தேதி மே 5, 2022 முறையே மற்றும் செக்யூரிட்டீஸ் அண்டு எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆஃப் இந்தியா (SEBI சுற்றறிக்கைகள்) வெளியிட்ட சுற்றறிக்கை எண்கள்.SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 தேதி மே 12, 2020, SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 தேதி ஜனவரி 15, 2021 மற்றும் SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62 தேதி மே 13, 2022-க்கு ஏற்ப முறையே பொதுக்கூட்டம் நடைபெறும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

MCA மற்றும் SEBI சுற்றறிக்கைகளுக்கு இணங்க, கம்பெனியின் 52வது ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பு அத்துடன் 2021-22-க்கான ஆண்டு அறிக்கை, கம்பெனி/டெபாசிட்டரிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு மட்டும் திங்கட்கிழமை, ஜூலை 4, 2022 அன்று மின்னணு முறை மூலம் அனுப்பப்பட்டுள்ளது மற்றும் காகித வடிவிலான 2021-22-க்கான வருடாந்திர அறிக்கையை பெற விரும்பும் உறுப்பினர்கள் **ohl.shares.mad@tajhotels.com**-என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது ஃபோலியோ எண்./DP ID மற்றும் கிளையன்ட் ID குறிப்பிட்டு கோரினால் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

கம்பெனியின் 2021-22-க்கான ஆண்டு அறிக்கை அதனுடன் கூடிய 52வது ஆண்டு பொதுக்கூட்ட அறிக்கை மற்றும் விளக்க அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளமான **https://www.orientalhotels.co.in**-லும், மேலும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட்டின் (NSDL) இணையதளமான **www.evoting.nsdl.com**-லும் கிடைக்கப்பெறும். மேலும், இதன் நகல் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளங்களானான **www.nseindia.com** மற்றும் **www.bseindia.com**-லும் கிடைக்கபெறும்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு

கம்பெனிகள் சட்டம் 2013 சட்டப்பிரிவு 108 ('சட்டம்') அவ்வப்போது திருத்தப்பட்ட கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 20, இந்திய நிறுவன செயலாளர்கள் நிறுவனம் வழங்கப்பட்ட பொதுக்கூட்டங்களுக்கான செயலக தரநிலை-2 மற்றும் ஒழுங்குமுறை 44-ன் SEBI (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) ஒழுங்குமுறைகள் 2015-ன் மற்றும் அதனுடன் வாசிக்க வேண்டிய MCA சுற்றறிக்கைகளுக்கு இணங்க பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களிலும் வாக்களிக்க கம்பெனியின் உறுப்பினர்களுக்கு NSDL-ன் மின்னணு வாக்களிப்பு தளத்தை பயன்படுத்தி, ஆண்டு பொதுக்கூட்ட நடக்கும் முன்பு மற்றும்/கூட்டம் நடக்கும் போது தொலைத்தூர மின்னணு வாக்களிக்கும் வசதியை வழங்கியுள்ளது.

உறுப்பினர்களின் பதிவேடு/ பயனாளர் பதிவேட்டில், வியாழக்கிழமை ஜூலை 21, 2022 (கட்-ஆப் தேதி) வரை உள்ள பதிவான உறுப்பினர்கள், ஆண்டு பொதுக்கூட்டம் நடக்கும் முன்பு மற்றும் நடக்கு போது தொலைத்தூர மின்னணு வாக்களிக்கும் வசதியைப் பெறுவதற்கு தகுதியுடையவர். கெடுத்தேதியன்று கம்பெனியின் செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனத்தின் பங்குகளின் விகிதத்திற்கு ஏற்ப உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமை இருக்கும்.

உறுப்பினர்கள் எந்தவொரு தீர்மானத்தீர்க்கும் தொலைத்தூர மின்னணு வாக்களிப்பு மூலம் ஆண்டு பொது கூட்டம் நடக்கும் முன்பு / நடக்கும் போது வாக்களிக்கலாம். ஆண்டு பொதுக்கூட்டம் நடக்கும் முன்பு / நடக்கும் போது தொலைத்தூர மின்னணு வாக்களிப்பின் வரிவான விளக்கம் ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பு குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது,

தொலைதூர மிண்ணணு வாக்களிக்கும் வசதி பின்வரும் காலகட்டத்தில் கிடைக்கும் :

தொலை மின் வாக்களிப்பு ஆரம்பம்	**ஞாயிற்றுக்கிழமை, ஜூலை 24, 2022 காலை 9.00 மணி முதல் (இந்திய நேரப்படி)**
தொலை மின் வாக்களிப்பின் முடிவு	**புதன்கிழமை, ஜூலை 27, 2022 மாலை 5.00 மணி வரை (இந்திய நேரப்படி)**

தொலைத்தூர மின்னணு வாக்களிப்பதற்கான மின்னணு கூடகம் அதன் பின்னர் NSDL-யால் செயலற்றதாக்கப்படும் மற்றும் உறுப்பினர்கள் தங்களது வாக்குகளை மேற்சொன்ன தேதி மற்றும் நேரத்திற்கு பிறகு மின்னணு முறையில் வாக்களிக்க முடியாது. ஒரு தீர்மானத்தின் மீது உறுப்பினர் வாக்களித்த பின்னர் அதை மாற்றவோ அல்லது மீன்டும் வாக்களிக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதி மேலும் கூட்டம் நடைபேறும் போது மற்றும் உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்கும் போதும் கிடைக்கப்பெறும். தொலைதூர மின்னணு வாக்கின் மூலம் ஏற்கனவே வாக்களிக்காதவர்கள் ஆண்டு பொதுக்கூட்டத்தில் வாக்களிக்கலாம்.

ஆண்டு பொது கூட்டம் நடைபெறுவதற்கு முன்னதாக தொலைத்தூர மின்னணு வாக்கு மூலம் தீர்மானத்தின்(கள்) வாக்களித்த உறுப்பினர்கள் ஆண்டு பொதுகூட்டத்தில் VC/OAVM மூலம் பங்கேற்க தகுதி உடையவர்கள் ஆனால் அத்தகைய தீர்மானகளில்(கள்) மீண்டும் வாக்களிக் உரிமை பெற மாட்டர்கள்.

காகித வடிவில் பங்குகள் வைத்திருக்கும் ஒரு நபர் மற்றும் தனி நபர் அல்லாத பங்குதாரர்கள், அறிவிப்பு அனுப்பிய பிறகு கம்பெனியின் பங்குகளை பெற்று உறுப்பினரானால் மற்றும் கட் ஆப் தேதியன்று பங்குகளை வைத்திருந்தால் அவர்கள் **evoting@nsdl.co.in**-க்கு மின்னஞ்சல் அனுபபி உள்நுழைவு ID மற்றும் கடவுச்சொல்லை பெற்று வாக்களிக்கலாம் அல்லது ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்கேற்கலாம். ஒரு நபர் ஏற்கனவே NSDL உடன் தொலைத்தூர மின்னணு வாக்களிப்பதற்காக பதிவு செய்திருந்தால் ஏற்கனவே உள்ள உள்நுழைவு ID மற்றும் கடவுச்சொல்லை பயன்படுத்தி வாக்களிக்கலாம்.

கட்-ஆப் தேதியின்படி உறுப்பினராக இல்லாத ஒருவர் ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பை தகவல் நோகத்திற்காக மட்டுமே கருத வேண்டும்.

ஆண்டு பொதுக்கூட்டம் நடக்கும் முன்பு / நடக்கும் போது தொலைத்தூர மின்னணு வாக்கு நேர்மையாகவும் வெளிப்படையான முறையிலும் நடைபெறுவதை ஆராய திருமதி தீபா.வி. ரமணி, பார்ட்னர், கேஎஸ்எம் அசோசியேட்ஸ், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர் அவர்களை ஆராய்வாளராராக நியமனம் செய்துள்ளது.

உறுப்பினர்கள் தொலைத்தூர மின்னணு வாக்கு பற்றி விவரங்கள் அறிய, ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பை பார்க்கவும். தொலைத்தூர மின்னணு வாக்கு பற்றிய சந்தேகங்களுக்கு, **www.evoting.nsdl.com**-ல் பதிவிறக்க பிரிவின் கீழ் உள்ள அடிக்கடி கேட்கும் கேள்விகள் (FAQ) மற்றும் உறுப்பினர்களின் மின்னணு வாக்கு பயனர் கையேடு மூலம் விளக்கம் பெறலாம் அல்லது **evoting@nsdl.co.in** கோரிக்கை அனுப்பி பெற்று கொள்ளலாம்.

ஆண்டு பொதுக்கூட்டத்தில் இணைவதற்க்கும் மற்றும் தொலைத்தூர மின்னணு வாக்களிப்பு வசதியில் ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், NSDL-ஐ **evoting@nsdl.co.in**-ல் அணுகவும் அல்லது கட்டணமில்லா தொலைபேசி எண்கள் : 1800 1020 990 மற்றும் 1800 22 44 30-ல் அணுகலாம் அல்லது திரு.அமித் விஷால், முதன்மை மேலாளர்-NSDL அல்லது Ms.பல்லவி மாத்ரே, மேலாளர்-NSDL அவர்களை **evoting@nsdl.co.in** அணுகலாம்.

டெபாசிட்டரி மூலம் உள்நுழைவது தொடர்பான எந்தவொரு தொழில்நுட்பத்திற்கும் டிமேட் முறையில் பத்திரங்களை வைத்திருக்கும் தனிப்பட்ட பங்குதாரர்களுக்கான ஹெல்ப் டெஸ்க் அதாவது NSDL மற்றும் CDSL

உள்நுழைவு முறை	ஹெல்ப் டெஸ்க் விவரங்கள்
NSDL உடன் டிமேட் முறையில் பங்குகளை வைத்திருக்கும் தனிப்பட்ட பங்குதாரர்கள்	உள்நுழைவதில் ஏதேனும் தொழில்நுட்பச் சிக்கலை எதிர்கொள்ளும் உறுப்பினர்கள் **evoting@nsdl.co.in** என்ற முகவரியில் கோரிக்கைய அனுப்புவதன் மூலம் NSDL உதவி மையத்தை தொடர்பு கொள்ளலாம் அல்லது கட்டணமில்லா எண்.1800 1020 990 மற்றும் 1800 224 430-ல் அழைக்கலாம்.
CDSL உடன் டிமேட் முறையில் பங்குகளை வைத்திருக்கும் தனிப்பட்ட பங்குதாரர்கள்	உள்நுழைவதில் ஏதேனும் தொழில்நுட்பச் சிக்கலை எதிர்கொள்ளும் உறுப்பினர்கள் **helpdesk.evoting@cdslindia.com** என்ற முகவரியில் கோரிக்கைய அனுப்புவதன் மூலம் CDSL உதவி மையத்தை தொடர்பு கொள்ளலாம் அல்லது எண்.022-23058738 அல்லது 022-23058542-43-ல் அழைக்கலாம்.

புத்தக மூடல்

பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள், **வெள்ளிக்கிழமை, ஜூலை 22, 2022** தேதி முதல் **வியாழக்கிழமை, ஜூலை 28, 2022** தேதி வரை **(இரண்டு நாட்களும் உட்பட.)** ஆண்டு பொது கூட்ட நோக்கத்திற்காக மூடப்பட்டிருக்கும்.

குழுமத்தின் ஆணைப்படி
ஓரியண்டல் ஹோட்டல்ஸ் லிமிடெட்-காக
sd/-
பிரமோத் ரஞ்சன்
நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி

இடம் : சென்னை
தேதி : 05.07.2022

Redington
SEAMLESS PARTNERSHIPS

ரெடிங்டன் (இந்தியா) லிமிடெட்
பதிவு அலுவலகம் : சென்டர் பாயிண்ட், ப்ளாட் எண் 11 (SP), திரு. வி.கா. தொழில்துறை எஸ்டேட், கிண்டி, சென்னை -600032.
CIN: L52599TN1961PLC028758
தொலைபேசி எண் : 044-42243353
தொலைநகல் எண் : 044-22253799
மின்னஞ்சல்: investors@redington.co.in
இணையதளம் : www.redingtongroup.com

29வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு

கம்பெனிகள் சட்டம் 2013 ('சட்டம்') மற்றும் அதன் கீழுள்ள விதிகள் மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் ('MCA') வெளியிடப்பட்ட பொது சுற்றறிக்கை எண்கள். 14/2020, 17/2020, 02/2021, 20/2020, 02/2021 21/2021, 02/2022 மற்றும் SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015 வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்படி, அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை செயல்படுத்த கம்பெனியின் 29வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) புதன்கிழமை, ஜூலை 27, 2022 அன்று காலை 11.00 மணிக்கு (இந்திய நேரப்படி) காணொளி காட்சி ('VC') / பிற ஒலி ஒளி சாதனங்கள் ('OAVM') மூலமாக நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. கூட்டம் நடக்கும் இடம் கம்பெனியின் பதிவு அலுவலகமாக இருக்கும் என்று கருதப்படுகிறது. VC/OAVM மூலமாக மட்டுமே வருடாந்திர பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் ஆஜராகலாம் மற்றும் பங்கேற்கலாம். கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 103ன் கீழ் குறைந்தபட்ச எண்ணிக்கையை கணக்கிடுவதற்காக இதன் மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள் கணக்கிடப்படுவார்கள். எனவே, ஒரு பொது இடத்தில் உறுப்பினர்கள் நேரில் ஆஜராக வேண்டிய தேவையில்லை.

மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க, வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு உள்ளிட்ட ஆண்டறிக்கை, மின்னணு வடிவில் டெபாசிட்டரி பங்கேற்பாளர்(கள்) / பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இவை கம்பெனியின் இணையதளம் www.redingtongroup.com, பங்கு சந்தையின் இணையதளங்கள் அதாவது www.bseindia.com மற்றும் www.nseindia.com மற்றும் NSDL's வலைதளம் www.evoting.nsdl.com ஆகியவற்றில் கிடைக்கும். அறிவிப்பு உள்பட ஆண்டறிக்கையை மின்னணு வடிவில் அனுப்பும் பணி ஜூலை 5, 2022 அன்று முடிவடைந்தது.

அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்கள் மீது உறுப்பினர்கள் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதி மூலமும், வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது மின்னணு வாக்குப்பதிவு முறை மூலமும் வாக்களிக்கும் வசதிக்கு கம்பெனி ஏற்பாடு செய்துள்ளது. உறுப்பினர்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில்:

a) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தொடங்கும் தேதி மற்றும் நேரம்: ஜூலை 24, 2022, காலை 9.00 மணி (இந்திய நேரப்படி)

b) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முடிவுறும் தேதி மற்றும் நேரம்: ஜூல